[திரு. தங்கம் தென்னரசு] [2024 பிப்ரவரி 19

பயன்பெறும் வகையில் எதிர்காலத்தில் இந்த நாடே பின்பற்றும் என்று நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் நலன் காக்கும் இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு 13,720 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

55. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே கையெழுத்திட்ட முதல் ஐந்து கோப்புகளில் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கும் "விடியல் பயணம்" என்ற மகத்தான திட்டமும் ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மகளிரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டம் அவர்களுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரிவதாக பல்வேறு ஆய்வுகள் தெரிவித்திருக்கின்றன. சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் விடியல் பயணத் திட்டத்தின்மூலம் பயணம் செய்யும் பெண்களின் சதவீதம் 40 சதவீதத்திலிருந்து 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தினமும் சராசரியாக 50 இலட்சம் மகளிர் பயணம் செய்து, ஜனவரி 2024 நிலவரப்படி, பேருந்துகளில் மகளிர் 444 கோடி பயணங்களை மேற்கொண்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், திருநங்கைகள் மற்றும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது உதவியாளர்களும் கட்டணம் இல்லாமல் பயணம் செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது, மாநிலத்தின் மலைப்பகுதிகளில் வாழும் மகளிர் பயன்பெறும் வகையில் நீலகிரி மாவட்டம், கொடைக்கானல், வால்பாறை போன்ற மலைப் பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிரின் பேராதரவு பெற்ற இத்திட்டத்திற்கான மானியத்தொகையாக 3,050 கோடி ரூபாயை 2024–25 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

56. காலத்திற்கேற்ப அரசு நலத் திட்டங்களின் நோக்கத்தையும், செயல் வடிவத்தையும் மாற்றித் தகவமைத்துக் கொள்வது முதிர்ச்சியடைந்த ஒரு அரசின் செயல்பாடாகும். அந்தவகையில், ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மாணவியர் உயர் கல்வி பயிலுவதை உறுதிசெய்யும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட

2024 பிப்ரவரி 19] [திரு. தங்கம் தென்னரசு]

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டத்தில் 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் மாதந்தோறும் ரூபாய் 1,000 பெற்றுப் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், உயர்கல்வியில் முதலாமாண்டு சேரும் மாணவிகளின் எண்ணிக்கை நடப்பு ஆண்டில் 34 சதவீதம் அதிகரித்து, (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாக 34,460 மாணவியர் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர் என்பதை பெருமையுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட இந்தப் புதுமைப் பெண் திட்டம், வரும் கல்வியாண்டு முதல் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படும். இந்த ஆண்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த 370 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

57. "Nothing is more powerful than an idea whose time has come" புகழ் பெற்ற பிரெஞ்சு இலக்கியவாதியான விக்டர் ஹீயூகோவின் காலத்தை வென்ற இந்த வாசகத்திற்கு 21 ஆம் நூற்றாண்டில் செயல் வடிவம் கொடுத்தவர், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

58. மதிய உணவுத் திட்டம் மற்றும் சத்துணவுத் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்கள் தமிழ்நாட்டில் திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும், பல குழந்தைகள் காலை உணவு அருந்தாமல் பள்ளிக்கு வருவதால் அவர்களிடம் கவனச்சிதறல் தென்படுவதையும், ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் குழந்தைகளின் நலன் பாதிக்கப்படுவதையும் எடுத்துக் கூறி, கல்வியாளர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் பலரும் காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கடந்த பல ஆண்டுகளாகவே கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். எனினும், காலம் மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்களின் வருகைக்காகக் காத்திருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

59. சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" கடந்த 2022 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா